# மக்கள் குரல்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உத்தியோக பூர்வ இதழ்

ஒலி : 1 குரல் : 6 | மாதமிருமுறை | ஐப்பசி 2000 | அன்பளிப்பு : 5.00 ரூபா


14 NOV 2000





# செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராகப் பதவிப் பொறுப்பேற்பு

**பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு இடங்களையும் அம்பாறை மாவட்டத்தில் ஒரு இடத்தையும் பெற்றுக் கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் பங்கேற்றுள்ளது. நீண்ட காலத்திற்குப் பின்னர் வட பகுதியிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சரவையில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. சமாதான சகவாழ்வை நிலை நாட்டி இயல்பு வாழ்க்கையைத் திரும்பச் செய்வதற்கு தமிழ் பேசும் மக்கள் வழங்கியுள்ள ஆணையின் படி அரசில் பங்கேற்க ஈ.பி.டி.பி. முன் வந்துள்ளமை பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.**

ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவையில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு அபிவிருத்தி புனரமைப்பு, புனர்வாழ்வு, தமிழர் விவகாரம் வடக்கு, கிழக்கு மற்றும் இந்து சமயவிவகாரங்கள் என்னும் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சுப் பொறுப்பில் கீழ்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வடக்கின் மீள் குடியமர்த்துகை புனர்வாழ்வளிப்பு அதிகாரசபை (ரான்), பனம் பொருள் அபிவிருத்தி சபை, ஆனையிறவு செம்மணி உப்புத் தொழிற்சாலையும் உப்பளங்களும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, சீநோர் பவுண்டேசன் லிமிடெட், இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் அனைத்துச் செயற்பாடுகளும் இந்த அமைச்சினால் நெறிப்படுத்தப்படவுள்ளது. வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கின் தமிழ்த் விவகாரங்கள் என்பன தொடர்பிலான தேசியக் கொள்கையின் பாற்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஆக்குதல் மற்றும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்படுத்துகை சார்ந்த வழிகாட்டுதல்கள், போரினால் பாதிக்கப்பட்ட இயலாமைக்கு உட்பட்டவர்கள், அநாதைகள், இளைஞர்கள் மகளிர்கள் ஆகியோரின் புனர்வாழ்வளிப்புக்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் ஆகியவற்றிற்கான பொறுப்புக்களை இந்த அமைச்சு உள்ளடக்கியுள்ளது.

மேலும் நாட்டின் இயல்பு நிலையினை மீண்டும் நிலைநாட்டுவதற்கு தகவல் மற்றும் ஊடகத்துறைகளில் விஷேட நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் செயற்படுத்துகையும், உற்பத்தி சமூக பொருளாதார உட்கட்டமைப்புகளின்

8ம் பக்கம் பார்க்க

## மக்களுக்கு நிறைவான சேவையாற்ற வாழ்த்துக்கள்

யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மையை பெற்றுக் கொண்டமைக்காக எனது வாழ்த்துக்களை பணிவுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்களும் உங்கள் தோழர்களும் மக்கள் மத்தியில் நின்று அவர்களுடைய தேவைகளுக்கு சேவை புரிவதில் திட்டமிட்டு பணியாற்றியபடியினால் நீங்கள் அனைவரும் இவ் நல்வாழ்த்துக்கு உரித்தாகுகின்றீர்கள்.

உங்கள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்திருந்தீர்கள். தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண அரசிற்கு அழுத்தத்தைக் கொடுக்கின்ற ஒரு முடிவை தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட்டு முன்னெடுத்து வரவேண்டும் என்ற எனது எண்ணத்தை ஊடகங்களுக்கு நான் வெளியிட்டுள்ள பல அறிக்கைகள் வாயிலாக நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். இப்பிரச்சினை தீர்க்கப்படும் வரையும் இப்பிரச்சினை தீர்க்கப்படாதிருக்கும் வரையும் வடக்கு கிழக்கில் மேற் கொள்ளப்பட விருக்கும் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளும் பூச்சியத்திற்கே வரும்.

7ம் பக்கம் பார்க்க

## காளாஞ்சி வழங்கி பொன்னாடை போர்த்தி இந்து மதகுருமார் ஆசி தெரிவிப்பு

இந்து சமய விவகாரங்களைக் கவனிப்பதற்கும் கையாள்வதற்கும் இந்து சமய கலாச்சார அமைச்சு நிறுவப்பட்டிருந்தது. ஆனால் 1994ற்குப் பின்னர் இவ் அமைச்சு ஒரு திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளது. இந்தக் குறைபாட்டை போக்க யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் முன்வரவேண்டும். இவ்வாறு அண்மையில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துப் பேசிய இந்துமத குருமார்கள் கோரிக்கை விடுத்தனர்.

சர்வதேச இந்து மத குருபீடத்தலைவர் ஸ்ரீ ஐயப்ப தாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் பல் வேறு தேவஸ்தானங்களையும் சேர்ந்த பத்தொன்பது இந்து மத குருமார்கள் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

7ம் பக்கம் பார்க்க

**இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் இதய ஒலி**

# இதய ஒலி

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்ல னேல்
மீக்கூறும் மன்னன் நிலம் (குறள் 386)

முறை வேண்டியும், குறைவேண்டியும் வருவோர்க்கு காண்பதற்கு எளியவனாய் யாரிடத்தும் கடுஞ்சொல் கூறாதவனாய் இருந்தால், அந்த அரசனது நாடு பிற நாடுகளை விட சிறந்ததாக இருக்கும்

# மாற்றுத் தலைமைக்கு அங்கீகாரம்

பதினோராவது பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தல் முடிவடைந்து விட்டது. அரசாங்கம் அமைக்கப்பட்டுவிட்டது. அமைச்சுப் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலின் பெறுபேறுகள் குறித்து பல்வேறு ஆய்வுகளும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தருணத்தில் இந்தத் தேர்தல்களின் மூலமாக தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் புலப்படுத்தியுள்ள உணர்வுகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

முதலாவதாக யுத்த சூழல் நிலவுகின்றது, மக்கள் மத்தியில் வாக்களிப்புக் குறித்து ஆர்வம் எதுவுமில்லை, மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதே அநாவசியமானது என்பன போன்ற பல்வேறு கருத்துக்கள் பரப்பப்பட்டு வந்தன. புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிபலிப்பவர்கள். ஆயுதம் ஏந்திப் போர் புரிவது மட்டுமே தேவையானது. ஏனைய அரசியல் செயற்பாடுகள் பதவிகளுக்கும் பட்டங்களுக்குமான போட்டிகள் என்ற உள்நோக்கத்தை அடிப்படையாக கொண்டே மேற்படி கருத்துக்கள் பரப்பப்பட்டு வந்தன. ஆனால் அம்பாறை முதல் யாழ்ப்பாணக் குடாநாடு வரை வாழ்ந்து வருகின்ற மக்களில் சுமார் அறுபது சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டுள்ளனர். நாட்டில் இதரபகுதிகளோடு ஒப்பிடுமிடத்து வடக்குகிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் தேர்தல் முறைகேடுகள் மோசடிகள் என்பன மிகவும் குறைவானது என்பது வெளிப்படையானது. எனவே தான் எந்தக் கட்சிக்கு வாக்களித்து இருந்தாலும் எவர் தெரிவு செய்யப்பட்டிருப்பினும் கூட தமிழ் பேசும் மக்கள் சமாதான சகவாழ்வின் மீது தமக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர் எனலாம். இன்னும் ஒருபடி மேலே கூறுவதானால் வடக்குகிழக்கு மாகாணத்திலிருந்து பொது சன ஐக்கிய முன்னணி சார்பாகவும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகவும் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றமையானது தமிழர் பிரச்சினைக்கு தனிநாடு அமைப்பதுவே தீர்வு எனக் கூறுறப்படுவதைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

இரண்டாவதாக வாக்களிப்பில் ஈடுபடுவதன் மூலமாக மக்கள் தமது இத்தகைய உள்ளத்து உணர்வுகளைப் புலப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளவோ சீரணிக்கவோ விரும்பாத சக்திகள் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு குழப்பத்தை ஏற்படுத்த முனைந்தன. மூதூர், மதவாச்சி ஆகிய இடங்களில் பாரிய குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பெருமளவு மனித உயிர்கள் பறிக்கப்பட்டன. பதட்ட நிலையைத் தோற்றுவித்துக் குழப்பத்தைத் தூண்ட எடுக்கப்பட்ட முயற்சிகளாக இவை இருந்தன. குண்டுகள் பாரிய சத்தத்துடன் வெடித்து உயிர் உடமைகளுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியபோதும் இச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் எண்ணியிருக்கக் கூடிய இலக்கு எட்டப்படவில்லை என்றே கூறலாம்.

ஆயுதமேந்திய எதிர்ப்பு இயக்கத்தின் அரசியல் முகவர்களாகத் தம்மை இனங்காட்டிக் கொண்ட பலரும் இத்தேர்தல் களத்தில் மக்கள் மத்தியில் அங்கீகாரம் கோரி நின்றனர்.இவர்களில் எவரையும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ ஆதரிக்கப் போவதில்லை எனப் புலிகள் பிரகடனம் செய்திருந்த பின்னரும் கூட கிளிப்பிள்ளைகள் போல புலிகளுடன் பேசுங்கள் என்று இவர்கள் திரும்பத் திரும்பக் கூறி வந்தனர். தத்தம் ஜனநாயக அரசியல் உரிமைகளுக்கான கௌரவத்தைக் கூட புலிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள அவர்களுக்கு இயலுமானதாக இருக்கவில்லை. இந்த உண்மையும் இத்தேர்தல் அரங்கில் வெளிப்பட்டுள்ளது.

வாக்களிப்புத் தினத்தன்று மக்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றன. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது கடனீரேரிக்கு அப்பாலிருந்து பலமான எறிகணை வீச்சுக்கள் நடத்தப்பட்டன. பொது மக்கள் செறிவாக குடியிருக்கும் பகுதிகளையும் கரையோரப்பகுதிகளையும் இலக்கு வைத்து எறிகணைகள் பொழியப்பட்டன. இத்தகைய ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு மத்தியிலும் சுமார் 60 சதவிகிதமானவர்கள் வாக்களிப்பில் பங்கு பற்றியுள்ளனர். எனவேதான் புலிகளின் வீரத்தை மெச்சவும் தியாகத்தை கௌரவிக்கவும் மக்கள் தயாராக இருக்கும் போதும் அவர்களது அரசியல் வழிகாட்டலுடன் ஒத்திசைந்து ஆயுதப்போரின் பங்காளர்களாக மாற்றத் தயாராக இல்லை என்பது உணர்த்தப்பட்டு இருக்கின்றது எனலாம்.

மூன்றாவதாக 1977ன் பொதுத் தேர்தல் முடிவுகளானது தமிழீழத் தனியரசுக்கான மக்கள் ஆணை என்றே பொதுவாக கருதப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக 1989ல் இடம்பெற்ற பொதுத்தேர்தலின் போது வடக்குகிழக்கு மாகாணத்திலிருந்து மக்கள் ஆதரவுடன் பாராளுமன்றத்திற்கு தெரிவான பிரதிநிதிகள் பதவி துறந்தமையின் மூலமாகவும் 1994ல் பொதுத் தேர்தலில் மக்கள் வாக்களிப்பதற்கான சுதந்திர சூழ்நிலை குடாநாட்டில் மறுக்கப்பட்டமையின் வாயிலாகவும் தொடர்ந்தும் புலிகளிடமே மக்களின் அரசியல் தலைமைத்துவத்தும் தங்கியிருப்பதாக வெளிப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இந்தத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் எதுவும் பாராளுமன்ற அரசியல் செயற்பாட்டிலிருந்து ஒதுங்கியிருப்பதன் மூலமாகவோ அல்லது புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏகபோக அரசியல் பிரதிநிதிகள் என்று குறிப்பிடுவதன் மூலமாகவோ புலிகளுக்கான அரசியல் பாதைக்கு வழிகாட்டமுடியாது என்பது உண்மை நிலையாகும். எனவே புலிகளின் தாகமாக தமிழீழத் தாயகமாக இருக்கின்ற போதும் கூட தமிழ்பேசும் மக்களின் தாகமாகத் தமிழீழத் தனியரசு இப்போதும் இல்லை என்பது வெளிப்படையாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்தப் பொதுத் தேர்தலின் முடிவுகள் தமிழ் பேசும் மக்கள் தமக்கு முன்னாலுள்ள மாற்று அரசியல் வழிகாட்டல்கள் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர் என்பதைப் புலப்படுத்துகிறது. திக்குக்கு ஒருவராக சிதறி நிற்கும் உதிரிகளையும் கற்பனைக் குதிரையில் சவாரி செய்யும் பாரம்பரிய இடது சாரிகளையும் இந்தத் தேர்தலில் ஓரங்கட்டியுள்ளனர். மாற்று தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய சக்திகளில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி முன்னிலையில் உள்ளது என்பதையும் இனங்காட்டியுள்ளனர். இந்த யதார்த்தத்தை ஒப்புக் கொள்ளவோ அங்கீகரிக்கவோ விரும்பாத சக்திகள் வழமைபோல சேறு பூசும் கைங்கரியங்களில் முனைப்புக் காட்டுகின்றனர். எனவே கவனமாகவும் பொறுப்புணர்வுடனும் எதிர்காலத்தில் செயற்பட வேண்டியது ஒவ்வொருவருக்கும் கடமையாக உள்ளது.

# வந்து குவியும் வாழ்த்துகளில் சில...!



தங்களின் பதவிக் காலத்தில் வடக்கு ஒரு புதிய தேசமாகக் கட்டி எழுப்பப்படவும் தமிழ் பேசும் மக்களின் செல்வாக்கு உயர்த்தப்படவும் தங்கள் முழு நேரத்தையும் பயன்படுத்து வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

கடந்த தேர்தல் மூலம் பெற்ற அனுபவங்கள் வாயிலாக தொடரும் பதவிக் காலத்தில் சரியான முறையில் திட்டமிட்டு பொருளாதார மேம்பாடு காண தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு எங்கள் பூரண ஒத்துழைப்பு என்றும் உண்டு.

விநாயகர் நூல்நிலையம்,
மறவன்புலவு மத்தி, சாவகச்சேரி.

தாங்கள் அமைச்சரவைப் பொறுப்பேற்றுள்ளமைக்காக எமது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தங்கள் பணி தொடர எமது நல் வாழ்த்துக்கள்.

சமூக கல்வி அபிவிருத்தி மன்றம்,
தம்பிலுவில்

நடந்து முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தாங்களும் தங்கள் கட்சி அங்கத்தவர்களும் ஈட்டிய வெற்றியையிட்டு தமிழ் மக்கள் என்ற வகையில் மனமார்ந்த வாழ்த்துக்கள், தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களது எதிர்பார்ப்புகளையும் தேவையையும் உங்களது உன்னதமான சேவையின் மூலம் நிறைவுசெய்க.

வெஸ்லிக் கல்லூரி கல்முனை.

தங்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கும் ஜனநாயக கோட்பாட்டிற்கும் இணங்க மக்களால் தெரிவு செய்யப்படுபவர் மக்களின் சேவகன் என்ற இலக்கணத்துக்கு அமைய தங்களின் பொறுமை மிக்கதும் பெருமையற்றதுமான பண்பிற்கும் கிடைத்த பரிசாகும்.

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள்
சங்கம்.

தாங்கள் மிகுந்த ஆரோக்கியத் துடனும் நீண்ட ஆயுளுடனும் இருந்து எமது பிரதேசத்திற்கு பற்பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆண்டவரைப் பிரார்த்திப்பதுடன் மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

பனை அபிவிருத்தி ஊழியர்கள் சங்கம்.

சென்ற முறை தமிழன் தலை குனியக் கூடாது என்பதை நிலைநாட்டின பெருமையைத் தேடித் தந்தவர் நீங்கள். நீங்கள் அமைச்சராகப் பதவியேற்றமைக்கு எங்கள் வாழ்த்துக்களும் பாராட்டுகளும் உரியதாகட்டும்.

புனித ஜோன் அம்புலன்ஸ் சங்கம்,
யாழ்ப்பாண மாவட்டம்

தமிழ் மக்கள் அகதிகளாக அனாதைகளாக நாடிழந்து நகரிழந்து அனாதைகளாகத் தத்தளித்த நேரத்தில் அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து ஒரு ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திட்டு உள்ளீர்கள். தங்களுக்கும் தங்கள் கட்சிக்கும் கிட்டிய வெற்றியையிட்டு எமது கல்லூரிச் சமூகம் பெருமை கொள்கிறது, வாழ்த்துக்களை தெரிவிக்கிறது. கடந்த காலங்களில் தாங்கள் தமிழ் வாழ தமிழ்ச் சமூகம் வாழ இம் மண்ணில் காலூன்றி நின்று செய்த பணிகள் பல. எங்களது வாக்குகள் ஒரு பயன்பாடுள்ள நீண்ட பார்வையில் தமிழ் மக்களின் துயர்துடைக்க செயற்படுகின்ற ஒரு நல்ல உறுதிப்பாடான செயற்திறனுடைய கட்சிக்கு பயன்பட்டுள்ளது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

வட்டு மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை

தாங்கள் வழங்கிய சமூக சேவைகளும் அபிவிருத்திப் பணிகளும் தங்களின் பொதுநல வேட்கையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தங்களைத் தெரிவு செய்ய வைத்துள்ளது. தாங்கள் அமைச்சரவையில் இடம் பெற்றதையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தாங்கள் அமைச்சராகப் பணியாற்றுவதன் மூலமாக எமது மாவட்டம் மென்மேலும் அபிவிருத்தி அடையவும் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகள் துரிதமடையவும் வாய்ப்புக்கள் ஏற்படுமென நம்புகின்றோம்.

தங்களுக்கு எமது நல்வாழ்த்து களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதோடு தங்களுக்கு நிறைந்த நல் ஆயுளையும் நன் மதிப்பையும் பெற்றுத் தர வேண்டுமென இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை,
நீர்வேலி.

தமிழ் மக்களின் கலங்கரை விளக்காகத்திகழும் தங்களினதும் தங்கள் கட்சியினதும் வெற்றிக்காக நாவிதன்வெளி உப பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சியுடன் உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அநாதைகள் அல்ல என்பதை வெளிப்படுத்திய மா.குணசேகரம் அவர்களின் வெற்றிகண்டு பெருமிதம் அடைகின்றோம்.

உப பிரதேசசெயலகம், நாவிதன் வெளி.

பாராளுமண்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு அமைச்சராகவும் பதவி கிடைத்தமைக்கு எமது உளம்கனிந்த வாழ்த்துக்கள். நீங்கள் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்து செய்த சேவைகளை விட அமைச்சராக இருந்து எமது வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்ற நோய் நொடியின்றி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திருக்கிறேன்.

வ.நவரெத்தினம், சமாதான நீதவான்,
களுவாஞ்சிக்குடி.

நடந்து முடிந்த பொதத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவானதையிட்டும் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதையிட்டும் நாம் எமது மாவட்ட மக்கள் சார்பாகவும் மீனவ சமுதாயத்தின் சார்பாகவும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் மாவட்ட
மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

இலங்கையின் 11வது அமைச்சரவையின் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு கிழக்கு தமிழர் விவகார அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அம்பாறை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள் அபிவிருத்தி நிறுவன அங்கத்தவர்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன் தங்கள் அமைச்சும் கட்சியும் சிறப்புப் பெற இறைவனுடைய ஆசிர்வாதத்துடன் அன்புடன் வாழ்த்துகின்றோம்.

அம்பாறை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள்
அபிவிருத்தி நிறுவனம்.

11வது பாராளுமன்றத்தில் பொ.ஐ.முன்னணியுடன் ஆட்சியமைக்க ஆதரவு வழங்கியமைக்கும் தங்களுக்கு அமைச்சு பொறுப்பு தரப்பட்டுள்ளதை யிட்டும் மனமகிழ்ச்சி அடைகின்றோம். தங்கள் பதவிக் காலத்தில் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் படும் துன்பதுயரம் நீங்கி நிம்மதியாக சுயகௌரவத்துடன் வாழ தங்களால் ஆன நடவடிக்கைகளை எடுப்பீர்கள். என்பதில் முழு நம்பிக்கை கொள்வதுடன் வடக்கு கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து கம்பகா மாவட்டத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் தங்களால் ஆன உதவிகளைப் புரியவும்.

இறைவனின் நல்லாசி வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எங்கள் இதய பூர்வமான நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அ.சிவனேசராசா சமாதான நீதவான்,
நீர்கொழும்பு.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் எங்கள் மதிப்புக்குரிய பேரன்புக்குரிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் ஏனைய எம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் மனமார வாழ்த்துவதில் அகமகிழ்கின்றோம்.

அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்
கழகம், உப்புக்குள வீதி, ஊர்காவற்றுறை.

தங்களின் பெருந்தன்மையான மனத்திற்கும், சிரமம் பாராது எந்த நேரமும் மற்றவர்களுக்கு உதவுகின்ற சிறந்த பண்புக்கும் தங்களின் உயர்ந்த சிந்தனைகளுக்குமாக இறைவனால் வழங்கப்பட்ட பரிசாகவே இந்த அமைச்சர் பதவியைக் கருதுகின்றோம். தங்களுக்கு மேலும் மேலும் உயர் பதவிகளும் நீண்ட ஆயுளும் சகல பேறுகளும் கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென் ஆசியக் கலைகள் மற்றும் கலாச்சார
நிலையம்.

தன்மானத் தமிழனாகிய நீங்கள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து அனுபவிக்கும் இன்னல்கள் ஒழிய தங்களால் இயன்ற சேவைகளைச் செய்வீர்கள். இளைஞர்களாகிய எம் தலைமுறையி னருக்கு நல்வழி காட்டுவீர்கள். இவற்றையிட்டு நாங்கள் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம். எங்கள் உளம்கனிந்த வாழ்த்துக்கள் தங்கள் பணியில் சிறப்பு எய்துவதுடன் அரசியல் வாழ்வில் அரிய பல சாதனைகளை நிலைநாட்டி பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள், சித்தி விநாயகர் இந்து
கல்லூரி, மன்னார்.

சகல இன மக்களிடையேயும் தாங்கள் வைத்துள்ள நல்லெண்ண வெளிப்பாடுகளை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம் முன்னணியின் சார்பிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் சார்பிலும் பெருமதிப்புடன் நன்றி கூறுகின்றோம். தமிழ் முஸ்லிம் மக்களின் புனித தினங்களாகிய சிவராத்திரி மற்றும் புனித ஹஜ் தினங்கள் மீண்டும் பொது விடுமுறைதினங்களாக பிரகடனம் செய்யப்பட நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றோம்.

இஸ்லாமியர் மீட்பு முன்னணி.

தாங்களும் தங்களுடைய தோழர்களும் தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதுடன் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக பதவி கிடைத்ததையிட்டு நாம் மட்டுமல்ல எமது தமிழ் மக்களும் பெரும்மகிழ்ச்சி அடைகின்றோம்.

தங்கள் சேவை தொடர நாமும் யாழ். மாவட்ட ஒப்பந்த அடிப்படையிலான திட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் சங்கமும் நீடுழி காலம் வாழ்க என்று மனமார வாழ்த்துகின்றோம்.

ஒப்பந்த அடிப்டையிலான திட்ட தொழில்
நுட்ப அங்கத்தவர்கள், யாழ்ப்பாணம்.

தமிழ், முஸ்லிம் மக்களிற்கும் ஏனைய மக்களிற்கும் நேரிய சேவையாற்ற எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு உங்கள் அன்பு மனதுக்கு இறைவன் நல் ஆறுதலையும் அளிப்பாராக.

சிறிலங்கா நிதஹஸ் தேசிய போக்குவரத்து
ஊழியர் சங்கம், அக்கரைப்பற்று டிப்போ.

சமாதானம் ~ ஜனநாயகம் ~ சமூக முன்னேற்றம்

# வடக்கு கிழக்கு மாகாண, உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உடன் தேர்தல் நடத்துக!

### பிரஜைகள் குழு கோரிக்கை

தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் மூன்று இன மக்களின் நன்மையைக் கருதியும் அரசாங்க நிர்வாகத்தின் ஜனநாயகத் தன்மையை கருத்திற் கொண்டும் நீண்ட காலமாக நடத்தப்படாமலிருக்கும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைகள் என்பவற்றிற்கான தேர்தல்களையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு கரவாகு வடக்கு பிரஜைகள் குழுவின் பொதுச் செயலாளர் ஏ.எம்.எம்.நாபி மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார். ஜனாதிபதி பிரதமர் உள்ளூராட்சி அமைச்சர் தேர்தல் ஆணையாளர் ஆகியோருக்கு இம்மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமெனப் பல பொதுநல அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. எனினும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் யுத்த சூழ்நிலையைக் காரணம் காட்டி அரசாங்கம் கவனமெடுக்காமல் இருந்து வருகிறது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய வகையில் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் பொதுத் தேர்தல் என்பன வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. எனவே அசாதரணமான சூழ்நிலையின் கீழ் இரண்டு தேர்தல்களை நடத்த முடியுமாயின் ஏன் இந்தத் தேர்தல்களையும் நடத்த முடியாது.

இன்றைய நிலையில் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இன்மையினால் சகல அதிகாரங்களும் அரச அதிகாரிகளின் கைகளிலும் உள்ளது. இதனால் அடிமட்டத்திலுள்ள பொது மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பது வினாவாகவுள்ளது. இத்துடன் திணைக்களங்களில் நிலவும் முறைகேடுகள் பற்றி தட்டிக் கேட்க மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையுண்டு. யுத்த அனர்த்தங்களால் நாளாந்தம் பாதிக்கப்படும் பொது மக்களின் தேவைகளை எடுத்தியம்பி உடன் விமோசனம் பெற இத் தேர்தல்கள் உடன் நடத்தப்பட வேண்டும்

# குடாநாட்டு மக்களுக்காக மாதாந்தம் 100 மில்லியன் ரூபா செலவு

### யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது குடியிருக்கும் சுமார் 1,48,000 ஆயிரம் குடும்பங்களுள் 1,16,000 குடும்பங்களுக்காக மாதாந்தம் எண்பது மில்லியன் ரூபா முதல் நூறு மில்லியன் ரூபா வரையில் அரசாங்கத்தினால் செலவிடப்படுகிறது. அரிசி, சீனி, பால்மா, பருப்பு போன்ற நிவாரணப் பொருட்களாக இவை வழங்கப்படுகிறது. அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் சுமார் 10 முதல் 15 நாட்களுக்கே போதுமானதாக இருக்கின்றது. இந்தப் பொருட்களின் அளவை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் மாதாந்தம் மேலதிமாக நூறு முதல் நூற்றியம்பது மில்லியன் ரூபா தேவையாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் தெரிவித்தார். கொழும்பிலுள்ள மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் வேலைப் பட்டறையொன்று அண்மையில் நடத்தப்பட்டது. இப் பட்டறையில் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளும் பங்குபற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இணையத் தலைவர் பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற வேலைப் பட்டறையில் உரையாற்றிய திட்டப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் மேலும் குறிப்பிடுகையில்

யாழ்ப்பாண குடா நாட்டில் யுத்த அனர்த்தங்கள் காரணமாக தமது சொந்த இருப்பிடங்களை விட்டு பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் அனைவரதும் வாழ்விடம், உணவு, குடிநீர், சுகாதாரம், கல்வி மற்றும் தொழில் பிரச்சினைகளை அரசாங்கத்தினால் மட்டும் தீர்த்து வைக்க முடியாது என்றார்.

அங்கு உரையாற்றிய புனர்வாழ்வு அதிகாரியான சத்தியசீலன் தமது உரையில் இடம்பெயர்ந்த மக்களுக்குப் போதிய இருப்பிடங்கள் இல்லை எனக் கூறப்படுகிறது. தற்காலிக தங்குமிட முகாம் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரப்படுகிறது. ஆனால் தெல்லிப்பளையில் அமைக்கப்பட்ட தற்காலிக தங்குமிட முகாம் சகல வசதிகளுடனும் இருக்கிறது. இடம் பெயர்ந்த குடும்பங்களை அங்கு குடியேறும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் எந்தவொரு குடும்பமும் அங்கு தங்க வரவில்லை. இது வேதனைக்கு உரியது. இடம் பெயர்ந்தோர்கள் மத்தியில் போதிய மனமாற்றம் ஏற்படவேண்டும். இப் பணியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட வேண்டும். எல்லாவற்றிற்கும் மற்றவர்களை எதிர்பார்த்து வாழ்கின்ற உணர்வை மாற்ற வேண்டியது அவசியம் என்றார்.

இவ் வேலைப் பட்டறையில் பங்கு கொண்டிருந்த சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி லிகெனாட் தமதுரையில் இடம் பெயர்ந்த குடும்பங்களில் வாழ்கின்ற பெண்கள், சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிகள் பற்றிய பிரச்சினைகள் இங்கு ஒரு துளியேனும் ஆராயப்படவில்லை. இது கவலைக்குரியது. இக் குழுமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் கூட இங்கு பங்கு கொள்ளவில்லை என்பது வேதனைக்கு உரியது என்றார்.

## போசாக்கின்மையால் பாதிப்பு

போசாக்கின்மை காரணமாக கடந்த ஒன்பது மாதங்களில் 28 ஒரு மாத சிசுக்கள் மல்லாவி மருத்துவமனையில் மட்டும் உயிர் இழந்துள்ளன. அத்துடன் கடந்த ஒன்பது மாதங்களில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இரத்தச் சோகை நோய் காரணமாக 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 153பேர் சிகிச்சை பெற்று வருவதையும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னிப் பகுதியில் மலேரியா நோயின் பாதிப்பு உட்பட பல்வேறு காரணங்களால் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், சிறார்கள் பலரும் போசாக்கின்மையால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

## வீடமைப்பு பணியில் நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடனும் அவர்களின் நலன் கருதியும் வீடமைப்பு திட்டமொன்றை நல்லூர் பிரதேச சபை ஆரம்பித்துள்ளது. இத் திட்டத்திற்கென சபை நிதியிலிருந்து பதினான்கு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சபை நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம் சகல தொழிலாளர்களுக்கும் கிட்டும் வகையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளது.

# கண்டிப்பதற்கு மட்டுமன்றி தடுத்து நிறுத்தவும் முன்வருக

ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவது போன்ற சம்பவங்களை கண்டிப்பதற்கு மட்டுமன்றி தடுத்து நிறுத்தவும் மக்கள் முன்வர வேண்டும்.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொல்லப்பட்டமை தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயக் கட்சி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்படுகையில்



இந்த நாட்டில் ஜனநாயக சூழலை உருவாக்க வேண்டும். குறிப்பாக தமிழ் அரசியலில் ஜனநாயகத் தன்மைகளை மதிக்கும் நிலையை உருவாக்க வேண்டும். கருத்து சுதந்திரமும், பாதுகாப்பும் உறுதிப் படுத்தப்பட வேண்டும். இவற்றிற்காக நாங்கள் எப்போதும் குரல் கொடுத்து வந்துள்ளோம். இதற்கு எதிர் மாறான இத்தகைய போக்குகளை நிச்சயம் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும். இந்த அரசியல் சூழலில் எந்தப் பக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி அவர்களது கருத்துச் சுதந்திரமும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்காக மக்கள் இத்தகைய சம்பவங்களைக் கண்டிக்க மட்டுமன்றி தடுத்து நிறுத்தவும் முன்வரவேண்டியது அத்தியாவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.டி.பி யின் தேர்தல் பெறுபேறுகள் ஒரே பார்வையில்

### யாழ்ப்பாண மாவட்டம்.

| | | |
|---|---|---|
| ஊர்காவற்துறை | - | 12,311 |
| வட்டுக்கோட்டை | - | 4,869 |
| காங்கேசன்துறை | - | 4,068 |
| மானிப்பாய் | - | 5,737 |
| கோப்பாய் | - | 5,044 |
| உடுவில் | - | 1,662 |
| பருத்தித்துறை | - | 1,862 |
| சாவகச்சேரி | - | 1,256 |
| நல்லூர் | - | 2,560 |
| யாழ்ப்பாணம் | - | 1,571 |
| கிளிநொச்சி | - | 216 |
| தபால் வாக்குகள் | - | 380 |
| இடம்பெயர் வாக்குகள் | - | 135 |
| மொத்தம் | - | 41,671 |

### வன்னி மாவட்டம்

| | | |
|---|---|---|
| வவுனியா | - | 1,129 |
| மன்னார் | - | 157 |
| முல்லைத்தீவு | | - |
| மொத்தம் | - | 1,286 |

### திருகோணமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| திருகோணமலை | - | 3,382 |
| மூதூர் | - | 746 |
| சேருவில் | - | 316 |
| தபால் வாக்குகள் | - | 80 |
| மொத்தம் | - | 4,524 |

### மட்டக்களப்பு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| கல்குடா | - | 692 |
| மட்டக்களப்பு | - | 2608 |
| பட்டிருப்பு | - | 1209 |
| தபால் வாக்கு | - | 70 |
| மொத்தம் | - | 4580 |

### திகாமடுல்ல மாவட்டம்

| | | |
|---|---|---|
| கல்முனை | - | 5480 |
| சம்மாந்துறை | - | 3144 |
| அம்பாறை | - | 12 |
| பொத்துவில் | - | 10,729 |
| மொத்தம். | - | 19,365 |

# திருமலை மாவட்ட தேர்தல் பெறுபேறுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியே பொறுப்பாகும்

### திருகோணமலை மாவட்ட தேர்தல் பெறுபேறுகள் குறித்து முதன்மை வேட்பாளர் த. புஸ்பராசா அவர்கள் முன்வைத்துள்ள கருத்துக்கள் இங்கே.

1 *நீங்கள் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட திருகோணமலை மாவட்ட தேர்தல் பெறுபேறுகள் குறித்து உங்கள் மதிப்பீடுகள் என்ன?*

தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியான ஈழமாநிலத்தின் தலைநகர் திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனதையிட்டு நாம் கவலை அடைகின்றோம். தேர்தலில் போட்டியிட்ட தமிழ் அரசியற் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடையே குறைந்தபட்சம் தேர்தலில் போட்டியிடுவதிலாவது ஒற்றுமையை வெளிப்படுத்தியிருக்கலாம். இந்த மாவட்ட தேர்தல் முடிவுகளுக்கு அதாவது தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனமைக்கு கூட்டணியினரே பொறுப்பேற்க வேண்டும். அத்துடன் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளை வெறும் பதவிப் போட்டியாகச் சித்தரித்து வாக்களிப்பில் அவநம்பிக்கையைத் தூண்டிய தமிழ் ஊடகவியலாளர்களும் கூட இப் பொறுப்பில் பங்கேற்க வேண்டும். ஏனெனில் கணிசமான தமிழ் மக்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதை தமது ஜனநாயகக் கடமை என்றெண்ணாமல் ஒதுங்கியிருந்துள்ளனர். மேலும் தமிழ் பேசும் மக்கள் தமது எரிகின்ற பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய மாற்றுத் தலைமையொன்றை வளர்த்தெடுப்பதற்கு மாறாக தேசியக் கட்சிகளைத் தெரிவு செய்திருப்பதும் கவனத்திற்கு உரியதாகும்.

1 *திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கத்தை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?*

திருகோணமலை மாவட்ட வேட்பாளர்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மை ஏற்கனவே கூறியது போல மாவட்டத்திற்குரிய தமிழர் பிரதிநிதித்துவத்தை இழக்கச் செய்துள்ளது. இனத்துவ அடிப்படையில் மிகவும் உக்கிரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் எமது மாவட்ட தமிழ் பேசும் மக்களுக்கு இது எதிர்காலத்தில் பெரும் பிரச்சினையாக இருக்கலாம். இம் மாவட்ட மக்களுடைய அரசியல் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான கருத்துக்களை சட்டபூர்வமாக முன்வைக்கக் கூடிய களமொன்றை இழந்து விட்டுள்ளனர். எனவே தங்களுடைய பிரச்சினைகளை அரசுக்கு எவ்வாறு எடுத்துக் கூறுவது எவ்வாறு அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

1 *வாக்களிப்பில் மக்கள் ஈடுபட முன்வந்தமை குறித்தும் வாக்களிப்பை புறக்கணித்தல் மற்றும் தேர்தலுக்கு எதிரான நிலைப்பாடுகள் குறித்து பொதுவான எண்ணங்கள் என்ன?*

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் அல்லது வாக்களிப்புக்கு எதிரான நிலைப்பாடுகள் எதுவும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்றே கூறவேண்டும். வேட்பு மனுத்தாக்கல் செய்தசில தினங்களிலேயே சில வேட்பாளர்கள் கடத்தப்பட்டும் சிலர் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகினர். தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக போட்டியிட்ட வேட்பாளர் உபையத்துல்லா கொலையுண்ட பாரிய குண்டு வெடிப்பு சம்பவம் மூதூரில் இடம்பெற்றது. இது தவிர பாரிய தேர்தல் வன்முறைகள் எதுவும் இங்கு இடம்பெற்றதாக இல்லை. இவற்றுக்கு மத்தியிலும் கூட சுமார் 60 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களித்து உள்ளனர். உப்புச்சப்பற்ற தேர்தல் பாராளுமன்றம் சென்று என்ன பிரயோசனம் என்றவாறான அவநம்பிக்கையைத் தூண்டும் பிரச்சாரங்களையே ஊடகங்கள் பொதுவாக மேற்கொண்டிருந்தன. குறிப்பாக கொழும்பை மையமாகக் கொண்ட தமிழ் மொழி ஊடகங்கள் இக் கருத்தைப் பரப்பி வந்தன. கிராமப்புற மக்களின் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளை இவ் ஊடகங்கள் கண்டு கொள்வதாக இல்லை என்பது கவலைக்கு உரியது. அத்துடன் வேட்பாளர்கள் மேற்கொண்ட அவதூறுப் பிரச்சாரங்கள், ஓரணி வேட்பாளர்களுக்குள்ளேயே நிலவிய போட்டி உணர்வு என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தாகும்.

1 *தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது, பொது மக்களின் ஒத்துழைப்பு மற்றும் கட்சித் தோழர்களின் பங்களிப்பு என்பன குறித்து உங்கள் கருத்துக்கள் என்ன?*

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது மக்களின் ஒத்துழைப்பு கணிசமானதாக இருந்தது. எனினும் அச்ச உணர்வின் காரணமாக பெரும்பாலானவர்கள் தம்மை வெளிப்படையாக இனங் காட்டிக் கொள்ளவில்லை. ஈ.பி.டி.பி இங்கு கடந்த பத்து வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றது. எனினும் மக்கள் மத்தியில் பலமான ஆதரவுத் தளத்தை இன்னமும் அமைத்துக் கொள்ளவில்லை. இருந்தாலும் இந்த மாவட்டத்தில் இப்போது தான் முதற்தடவையாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டுள்ளோம். இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது வளர்முக நிலையைக் கண்டு கொள்ள முடியும். எமக்கு தற்போது இங்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியாத போதும் கண்ணியமாக நாம் மேற்கொள்ளும் பணிகள் மூலம் எமது ஆதரவுத் தளத்தை வலுப்படுத்திக்கொள்ள முடியுமென்றே நம்புகின்றேன். இவ்வாறே கட்சித் தோழர்களின் அயராத உழைப்பிலும் திருப்தியைத் தெரிவிக்கின்றேன்.

1 *வாக்களிப்பு தினத்தன்று ஏதாவது இடையூறுகளை எதிர்நோக்கினீர்களா?*

எந்த விதமான இடையூறுகளையும் எதிர்நோக்கவில்லை. மக்கள் அமைதியான நிம்மதியான வாழ்வையே முதலில் இலக்காக கொள்கின்றனர். பாராளுமன்ற தேர்தலை வரவேற்று வாக்களித்துள்ளனர். மக்களின் இந்த எண்ண அலையை எவராலும் குழப்பிவிட முடியவில்லை. சகல தரப்பும் ஏதோ ஒரு வகையான புரிந்துணர்வுடன் செயற்பட்டது போலவே தெரிகின்றது. இது பிரமிக்கச் செய்கின்றது.

1 *தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் பொது மக்கள் மத்தியில் காணப்பட்ட பிரதிபலிப்புக் குறித்து என்ன கூறுகிறீர்கள்?*

தமிழ் மக்களுடைய வாக்குகள் வெவ்வேறு அணிகளுக்குச் சிதற தமிழர் பிரதிநித்துவம் பறிபோனமை ஒருவித அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. எதிர்பார்ப்பை மீறி முஸ்லீம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதும், முற்றிலும் தேசியக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் கிடைத்திருப்பதும் சில அரசியல் சங்கடங்களை உருவாக்கியுள்ளது. "எல்லாரும் கிண்ணியாவுக்குத் தான் இனிப் போக வேணும் போல" என்றார் என்னைச் சந்தித்த ஒருவர். கூட்டணியினரைத் தெரிவு செய்திருந்தால் கொழும்புக்கு போய்த்தான் சந்திக்க காத்திருக்க வேண்டி வந்திருக்கும். அதைவிட இது பரவாயில்லை என்பதுவே எனது பதிலாக இருந்தது அப்போது.

1 *இனிமேல் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள எண்ணியுள்ளீர்கள்?*

நடந்து முடிந்த பொதுத் தேர்தலை ஒரு பாடமாகக் கொண்டு வரும் காலத்தில் நாம் செயற்பட வேண்டும். அதற்கு தமிழ் மக்கள் எதிர் நோக்கும் அன்றாட பிரச்சனைகள் உடன் கவனிக்கப்பட வேண்டும். முக்கியமாக வேலைவாய்ப்பு அபிவிருத்தி போன்றவை கவனிக்கப்பட வேண்டும். பட்டினியிலிருப்பவனுக்கு முன்பாக எந்த அரசியல் சுலோகமும் எடுபடுவதாக இல்லை. கணிசமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திடும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மவர்களுக்கு நியமனங்கள் பெற்றுக் கொடுப்பதன் மூலமாகவே தமது அரசியல் பலத்தை கட்டி எழுப்புவது எமக்கு முன்மாதிரியாக இருக்கலாம். இவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்தால் எமது எதிர்காலமும் நிச்சயம் மலரும்.

# எமது பிரச்சாரம் பரவலாக மக்களைச் சென்றடைய வில்லை

### வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் சி. சிவகுமார்

1 *நீங்கள் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட வன்னி மாவட்டத்தில் எமது கட்சி பெற்ற தேர்தல் முடிவு சம்பந்தமாக என்ன கருதுகிறீர்கள்?*

எமது கட்சி இம் மாவட்டத்தில் பாராளுமன்ற ஆசனங்கள் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் கணிசமான அளவு மக்களின் ஆதரவு எமக்கு கிடைத்துள்ளது. ஏனைய சக அரசியற் கட்சிகள் கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக வன்னி மாவட்டத்தைத் தமது கோட்டையாக கட்டி வைத்திருந்தன. எனினும் எமது கட்சி இங்கு செயற்படத் தொடங்கிச் சிறிது காலம் தான். இக் காலப் பகுதிக்குள் கணிசமான அளவுக்கு மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளோம்.

1 *தேர்தலுக்கு முந்திய நாட்களில் மக்கள் மத்தியில் நிலவிய அபிப்பிராயங்கள் மற்றும் கணிப்பீடுகள் குறித்து?*

தேர்தலுக்கு முந்திய தினங்களில் மக்கள் மத்தியில் நிலவிய அபிப்பிராயங்கள் என்று ஆதார பூர்வமாக எதையும் குறிப்பிட முடியவில்லை. ஆனால் தமிழ்ப் பத்திரிகைகள் பலவும் வன்னி மாவட்டத்தில் பரவலாக உள்ள யுத்த துயரங்களையும், அதன் காரணமாக மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களையும் காரணம் காட்டி தேர்தல்களில் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை அல்லது நம்பிக்கை கொள்ளத் தேவையில்லை என்பதாகவே கருத்துப்பரப்பி வந்தன. பத்திரிகையாளர்கள் தமது சொந்த எண்ணங்களையே மக்கள் எண்ணங்களாகத் திரிபுபடுத்தி வந்துள்ளனர் என்பதையே தேர்தல் பெறுபேறுகள் காட்டுகின்றன.

1 *மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள முன்வந்தமை பற்றியும், வாக்களிப்பை புறக்கணிப்பது மற்றும் தேர்தலுக்கு எதிரான நிலைப்பாடுகள் குறித்த பொதுவான எண்ணங்கள் என்ன?*

யுத்த அனர்த்தங்களுக்குள் சிக்கியுள்ள எமது மக்கள் தங்களது அன்றாட அலுவல்களையே முடித்துக் கொள்ள நாதியற்று அலைகின்றார்கள். எனவே மீளவும் நிம்மதியாக தங்கள் வாழ்வை மீளக் கட்டியமைக்க அவர்கள் யுத்தமற்ற ஜனநாயக அரசியற் செயற்பாடுகளுக்கு ஆதரவு தருகின்றார்கள். அவ்ஆதரவின் வெளிப்பாடே தேர்தலில் தங்கள் வாக்குகளை அளிக்க முன் வந்தமையாகும். எனவே பரவலாக தேர்தலுக்கு எதிராகப் பரப்பப்பட்ட கருத்துக்கள் குறித்து, மக்கள் கருத்திற்கு எடுக்கவில்லை என்றே கருதுகின்றேன்.

1 *இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் மத்தியிலான இன உறவுகள் குறித்து இந்த வாக்களிப்பின் முடிவுகள் புலப்படுத்தும் விடயங்கள் என்ன?*

வன்னி மாவட்டத் தேர்தல் முடிவுகள் இன உறவுகளில் ஒரு சமநிலைத் தன்மையை ஏற்படுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. மூவின மக்களையும் கொண்ட வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர்களின் சன வீதாசாரத்திற்கு ஏற்ப பாராளுமன்ற பிரதிநிதித்துவம் பங்கிடப்பட்டுள்ளது. இருபெரும் தேசியக்கட்சிகளும் தலா ஒரு ஆசனங்களைப் பெற்றுள்ளன. தேசிய ஐக்கிய முன்னணி ஒரு ஆசனத்தையும், ரெலோ மூன்று ஆசனங்களையும் பெற்றுள்ளன.

1 *வன்னி மாவட்டத்தில் மற்றக் கட்சிகள் மேற்கொண்ட பிரச்சாரத்தில் எமக்கெதிரான முக்கிய விடயங்கள் என்ன?*

மக்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளில் பின் நிற்பதாகவும், அவசரகால நிலையை ஆதரித்து நிற்பது மற்றக்கட்சிகளின் பிரச்சாரத்தில் மேலோங்கி இருந்தது. தாங்கள் ஏதோ தமிழீழத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காக போராடும் வீரர்கள் போலக் காட்டிக் கொண்டனர். வன்னி மண்ணில் எமது குறுகிய கால அரசியற் செயற்பாட்டினால் எமது பிரச்சாரம் பெருமளவிலான மக்களை எட்டவில்லை.

# திருப்தியை தராத வெற்றி !



அன்புக்கினிய தோழர்களே!

பாசத்திற்கும் நேசத்திற்கு ம் . உரிய தமிழ் பேசும் மக்களே!

உங்கள் ஒவ்வொருவருக்கும் என் பணிவான வணக்கங்கள். பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் வாக்கெடுப்புக்கள் நடந்து முடிந்து விட்டுள்ளன. இந்தப் பொதுத் தேர்தலின்போது எமக்குக் கிட்டிய பெறுபேறுகள் குறித்து நாங்கள் ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இந்தத் தேர்தலின் போது எமது வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டு உழைத்த ஒவ்வொருவருக்கும் நாம் நன்றி செலுத்துகின்றோம். எமக்காக வாக்களித்த ஒவ்வொருவருக்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களுடன் அருகிலிருந்து ஒத்துழைத்தவர்களுக்கும் தொலைவிலிருந்து ஊக்குவித்தவர்களுக்கும் எங்கள் நன்றிகள் உரியதாகும். அத்துடன் எம்மை நோக்கி கடுமையான விமர்சனங்களையும் கண்டனக் கணைகளையும் தெரிவித்தவர்களின் கூற்றுக்களிலிருக்கும் உள்ளடக்கம் குறித்து நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றோம். இவை எம்மைச் செப்பனிடும். எமக்காக வாக்களித்தவர்களுக்கு நன்றி பாராட்டும் அதே வேளையில் இந்த மண்ணில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரதும் ஆக்க பூர்வமான மேம்பாட்டிற்காக எம்மாலான ஒத்துழைப்புக்களையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இதனை திட்டவட்டமாக வெளிப்படுத்திக் கொள்கின்றோம். இந்த வேளையில் இந்த தேர்தலின் பெறுபேறுகள் குறித்து நாங்கள் சிந்திப்பது தேவையானதாகும். ஏனெனில் இதிலிருந்து அடுத்த கட்டம் நோக்கிய எமது பயணத்திற்காக எம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்கு இது ஒரு அத்திவாரமாக அமையும். ஒரு படிக்கல்லாக விளங்கும். எனவே விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு தேர்தல் பெறுபேறுகள் தரும் படிப்பினைகளை ஒவ்வொரு தோழர்களும் உணர வேண்டும் என்று மிக்க விநயமாக எதிர்பார்க்கின்றோம்.

## ஈட்டப்பட்ட வெற்றிகள்

இந்தத் தேர்தலின் போது எமது கட்சி சுமார் 60,000க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலிருந்தும் இவ் வாக்குகள் பெறப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த தடவை யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாக்களிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்த மக்கள் இம்முறை வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர். பாராளுமன்றம் செல்லும் ஆசையுடன் அரசியல் வாழ்வுக்கு நாங்கள் அடியெடுத்து வைத்தவர்கள் அல்ல. இருந்த போதும் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய தேவையும் சூழ்நிலையும் உருவானபோது அதற்கு முகம் கொடுக்க முன் வந்தவர்கள் என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொண்டுள்ளனர். எமக்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரமாகவே இத் தேர்தலின் பெறுபேறுகளை நாம் எடுத்துக் கொள்ளலாம். எனவே இது ஒரு வெற்றி எனலாம்.

பாராளுமன்ற அரசியல் செயற்பாடுகளையே எள்ளி நகையாடிய பழம்பெரும் இடது சாரிகள் முதல் மூத்த தலைமுறையின் தலைவர்களான கூட்டணியினர் வரை பல்வேறு தரப்புக்களிலிருந்தும் எமக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள், பரப்பப்பட்ட அவதூறுகள் மற்றும் சேறுபூசுதல்கள் என்பனவற்றிற்கு மத்தியிலும் நாங்கள் நாகரீகமான அரசியல் பிரச்சாரத்தையே மேற்கொண்டிருந்தோம். இவை அனைத்துக்கும் செவி சாய்த்த மக்கள் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர் இது நாம் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடியதொரு விடயமாகும்.

தேர்தல் செயற்பாடுகளிலேயே மக்களுக்கு ஆர்வமில்லை, மக்கள்அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டவில்லை, வேட்பாளர்களை வேண்டாத விருந்தாளிகளாகக் கருதுகின்றனர் என்பன போன்ற விசமத்தனமான கருத்துக்கள் கபடத்தனமான உள்நோக்கங்களுடன் பரப்பப்பட்டு வந்தன. இந்த மண்ணில் இப்போதும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் மூன்றிலிருபங்கிற்கும் அதிகமானவர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டதன் மூலமாக சமாதான சகவாழ்வின் மீது தமக்குள்ள பேரவாவையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தியுள்ளனர். மூதூர், மதவாச்சி குண்டு வெடிப்புக்களின் மூலமாகப் பதட்டத்தை தோற்றுவிக்க எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. வேட்பாளர்களைக் கொன்றழிப்பதன் வாயிலாவும் மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் ஊடாகவும் தேர்தல் களத்தைச் சீர்குலைக்க எடுத்த பிரயத்தனங்கள் வலுவிழந்து போயின. ஜனநாயக அரசியல் செயற்பாட்டில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைச் சிதறடிக்கச் செய்த பிரயத்தனங்கள் பலன் எதுவும் கொடுக்கவில்லை. இதனால் வாக்களிப்புத் தினத்தன்று குடாநாட்டு மக்கள் மீது ஏவுகணைக் குண்டுகள் ஏவிவிடப்பட்டன. மக்கள் அல்லோலகல்லோலப் பட்டனர். உயிருக்கு அஞ்சி ஊர் ஊராக அலைந்தனர். இவ்வாறான சம்பவங்களை எல்லாம் தேர்தல் வன்முறைகளாக எவரும் வெளிப்படுத்துவதாக இல்லை என்பது கவலைக்குரியது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதாக கூறிக் கொள்பவர்களின் பார்வைக்கும் இவை சிக்கவில்லை என்பது வியப்புக்குரியது. இத்தனைக்கு மத்தியிலும் மக்கள் எம் மீது புலப்படுத்தியிருக்கும் நம்பிக்கைக்காக நாம் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கின்றோம்.

## திருப்தி தரவில்லை

இவ்வாறான வெற்றிகள் குறிக்கப்படுகின்ற போதும் இந்த தேர்தலின் பெறுபேறுகள் குறித்து நாங்கள் திருப்திப்பட்டுக் கொள்ளமுடியாது. அம்பாறையில் நாங்கள் ஒரு ஐம்பது சதவிகித வெற்றியை நிலைநாட்டியுள்ளோம். தமிழ் முஸ்லிம் மக்களின் விமோசனத்திற்காக என்ற அடிப்படைக் கோட்பாட்டை வலியுறுத்தி வருகின்ற எம்மை தமிழ் பேசும் மக்களின் ஒரு சாராரான முஸ்லிம் மக்களிடமிருந்து அந்நியப்படுத்திக் கொள்கிறோமா என்ற அச்சவுணர்வைத் தோற்றுவிக்கும் களமாக அம்பாறை மாவட்டம் ஆகிவிட்டதோ என்னும் ஐயமே அம்பாறையின் வெற்றி குறித்து பூரண திருப்தி கொள்ள முடியாமைக்குப் பிரதான காரணமாகும். மற்றும்படி அம்பாறையில் எமது கட்சியின் செயற்பாட்டிற்கு மக்கள் தகுந்த அங்கீகாரத்தை வழங்கியிருப்பதாகவே எண்ணுகின்றேன். மட்டக்களப்பு, திருமலை, வன்னி தேர்தல் மாவட்டங்களில் கணிசமான வாக்குகளைப் பெற்றபோதும் குறிப்பிடத்தக்க சக்தியாக வெளிப்படுத்திக்கொள்ள இயலவில்லை. தேசியக் கட்சிகள் என்று சொல்லக்கூடியவை இந்த மாவட்டங்களில் ஈட்டியுள்ள வெற்றிகள் என்பது தமிழ்பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து வித்தியாசமான வியாக்கியானங்களுக்கு இடடுச் செல்லும் ஆபத்தைக் கோடி காட்டுகின்றன எனலாம்.இந்த நிலைமைக்கான காரணங்கள் குறித்து நாங்கள் ஆராய வேண்டும். தேர்தல் செயற்பாடுகளையே புறம்தள்ளி நோக்கும் புலிகளின் மீதோ அல்லது மாற்றுக் கட்சிகளின் மோசமான செயற்பாடுகளின் மீதோ அல்லது சக தோழர்களின் பலவீனங்களின் மீதோ காரணங்களைச் சுமத்திவிட்டு நாங்கள் தப்பித்துக் கொள்ள முயலக்கூடாது. பதிலாக நாங்கள் செய்யத் தவறியவைகள் என்ன? எமது பலவீனங்கள் எவை? சிறப்பாகச் செயற்படுவதற்கு எமக்குள்ள தடைகள் என்ன? எமக்கு எதிரான முட்டுக்கட்டைகள் என்ன? என்பன குறித்து ஒரு சுய விமர்சனம்செய்து பார்க்க நாங்கள் முன்வரவேண்டும். இதன் மூலமாகவே எம்மைச் செப்பனிட்டுக்கொள்ளமுடியும். இதன் வாயிலாகவே மக்களுக்கும் எமக்கும் இடையிலான உறவை நெருக்கமானதாகவும் பலமாகவும் மாற்றிக் கொள்ள முடியும்..

## மக்களின் முன்னாலுள்ள தெரிவுகள்

எமது மக்களின் முன்பாக தற்போதுள்ள தெரிவுகள் துலாம்பர மாக்கப்பட்டுள்ளன. உணவு முதல் உரிமை வரை அனைத்தையும் போரில் ஈடுபடுவதன் மூலமாகவே பெற்றுக் கொள்ள விழையும் ஒரு போக்கு உண்டு. இந்தப் போக்கிற்கு புலிகள் தலைமை தாங்குகின்றனர். அழிவுகளைப் பற்றி கவலை இல்லாமல் இழப்புக்கள் குறித்து வருத்தம் கொள்ளாமல் வீரத்தை மட்டும் வெளிப்படுத்தினால் போதும் என்னும் இப்போக்கானது மக்களை துன்பங்களுக்கு உள்ளாக்குகிறது. துயரங்களை தருகின்றது. வேதனைகளை வளர்க்கின்றது. இந்தப் போக்கின் வழிகாட்டலில் தொடர்ந்தும் செல்வது புத்திசாலித்தனமானது அல்ல என்றே மக்களில் பெரும்பாலானவர்கள் உணர்கின்றனர். இந்தப் போக்கிலிருந்து அகன்று செல்வதையும் அந்நியப்பட்டுக் கொள்வதையும் மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். சமாதான சகவாழ்வை இலக்காக கொண்டு அரசியற் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வைத் தேடும் அதேவேளை அன்றாடப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் ஆக்கபூர்வமான போக்கு இரண்டாவது; வீரத்திற்கு பதிலாக விவேகத்தை வெளிப்படுத்தக் கோரும் போக்கு இது. இந்தப் போக்கையே நாங்கள் கடைப்பிடித்து வருகின்றோம். மெல்ல மெல்ல காலடி எடுத்து வைத்து நகரும் போக்கு இது. எனவே கண்ணுக்கு புலப்படக்கூடிய மாற்றங்களை விரைவாக வெளிப்படுத்துவது கடினமானது. இரவோடிராவாக விளைவுகளைப் பிரசவித்துக் காட்டக்கூடிய மார்க்கம் அல்ல இது. எனவே காலத்தை கனிய வைக்கும் முயற்சியுடன் காலம் கனிவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பாதை இது.

இவை இரண்டும் பிரதான அரசியற் போக்குகளாக வெளிப்படுத் த் ப்பட்டிருக்கும் அதேவேளை, பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும் காட்டும் சுயலாப அரசியற் போக்கும் ஒன்றுண்டு. தமிழீழத் தனியரசுக்காக ஆயுதப் போரை நடத்துவதாக கூறும் புலிகளின் துப்பாக்கிகளுக்கு அரசியல் அங்கீகாரம் தேடும் முகவர்களாக இவர்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். போரின் விளைவாக ஏற்படும் துன்பங்களை புலிகளின் செயற்பாடுகளிலுள்ள ஜனநாயக விரோதப் போக்கை கண்டு கொள்ளாமல், இவர்கள் போர் வளர்க்கும் அக்கினியில் குளிர் காய்கின்றனர். புலிகளுடன் பேசுங்கள் என கூக்குரல் எழுப்பும் இவர்கள் எது பற்றிப் பேசவேண்டும் என்பதையோ என்னென்ன விடயங்களில் இணக்கம் காணப்படலாம் என்பதையோ தெளிவாக வெளிப்படுத்துவதில்லை. வெறும் காற்றில் சிலை செதுக்கும் போக்குடன் ஆரவாரமான வீர வசனங்களையும் வெற்று வேட்டுக்களையும் அள்ளி வீசுகின்றனர். புலிகளின் துப்பாக்கிக் குறியிலிருந்து தப்புவதை இலக்காகக் கொண்டு ஏனையவர்கள் மீது பல்வேறு குற்றச் சாட்டுக்களை சுமத்துகின்றனர். இந்தப் போக்கின் எதிர்விளைவுகள் மக்கள் மத்தியில் அம்பலப்பட்டாக வேண்டும். இவை தவிர்ந்த மாறான வழிகள் எதுவும் தமிழ் பேசும் மக்களின் முன்னாலிருப்பதாக எமக்குத் தெரியவில்லை. தமிழ் பேசும் மக்களின் நல் வாழ்வில் அக்கறை கொண்ட பொது நலன் நாடும் சக்திகள் ஒவ்வொன்றும் இந்த மூன்று வழியில் ஏதோ ஒன்றுடன் தம்மை அடையாளப்படுத்தி கொள்ள வேண்டியதாகவே இருக்கின்றது. இனத்தின் நலன்கள் மீது உண்மையான அக்கறையும் மக்களின் மீதான அக்கறையான ஆர்வமும் கொண்டவர்களுக்காக எமது வாசல்கள் எப்போதும் திறந்தே இருக்கின்றது. ஆயுதப் போரின் அனர்த்தங்களிலிருந்து மக்களை விடுவிக்கும் நோக்குடனான சுயநல அரசியலின் ஆபத்திலிருந்து மக்களை பாதுகாக்க விரும்பும் ஒவ்வொருவரையும் அரவணைத்துக் கொண்டு முன்னோக்கிய பாதையில் பயணிக்க வேண்டுமென்றே நாங்கள் விரும்புகின்றோம். காலம் எமக்கு முன்னால் விடுத்திருக்கும் சவால்களுக்கு முகம் கொடுத்து எமது மக்களுக்கு எமது மண்ணில் நிம்மதியான வாழ்வை நிச்சயப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திட ஒவ்வொருவரும் தத்தம் ஆதரவுக் கரத்தை நீட்ட வேண்டும் என்றே விரும்புகின்றேன். எமது மக்கள் ஒவ்வொருவரதும் ஆக்க பூர்வமான ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பையும் நாடி நிற்கின்றேன்.

இந்த தேர்தலில் எமக்கு வழங்கிய உற்சாகம் ஒத்துழைப்பு ஊக்குவிப்பு என்பனவற்றிற்காக மீண்டும் மீண்டும் இதற்காகப் பாடுபட்ட ஒவ்வொருவருக்கும் எமது நன்றியறிதலை உரியதாக்கிக் கொள்கின்றோம். நன்றி

என்றென்றும் அன்புடன்
மக்கள் சேவையிலுள்ள
கே.என். டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம்.

**சமாதானம் ~ ஜனநாயகம் ~ சமூக முன்னேற்றம்**

# ஈ.பி.டி.பி. செயற்பாடுகள் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது

### - சென்னை இந்து ஆசிரிய தலையங்கத்தில் கருத்து

புதிய அரசாங்கத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் இடம் பெற்றுள்ளனர். இவர்களின் செயற்பாடுகள் பெரும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு சென்னையிலிருந்து வெளியிடப்படும் இந்து நாளிதழ் தனது ஆசிரிய தலையங்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பிடுகையில், விதிமுறை அரசியலுக்கு அப்பால் புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்வதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாகக் கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. அரசியலமைப்புக்குப் புறம்பான சக்தியொன்றின் பிரசன்னத்தை எதிர்கொள்ளும் தேவையை இது நினைவூட்டுகிறது.

ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு உரிய இடத்தை வழங்குவது தொடர்பான முக்கியமான பிரச்சினைக்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சியை மேற்கொள்ளும் உபாயத்தை வகுப்பதற்கு முன்னர் புதிய பாராளுமன்றத்தின் அரசியல் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பாக சிறிது காலத்திற்கு அவர் மதிப்பீடு செய்ய வேண்டிய தேவையுள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில் அரசியல் ரீதியான போக்குகளில் குறிப்பிடத்தக்களவு நெகிழ்வுப் போக்கு மேற் கொள்ளப்பட்டால் பாரியதாகக் காணப்படும் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியும்.

ஆனால் இது ஜனாதிபதி தனது அரசியல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சங்கடங்களைத் தாண்டி விட வேண்டும் என்று கொண்டிருக்கும் விருப்பத்தை மழுங்கடித்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அர்த்தத்தை தருவதாக அமையாது.

பெரும்பான்மை சிங்கள சமூகம் உட்பட சகல இனங்களுக்கும் மற்றும் அரசியல் ரீதியாகவும், முறையான அரசியலமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய பணிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அவருக்குள்ளது. ஆனால் மீளவும் உருவாக்கப்பட்டிருக்கும் அரசியல் அமைப்புடன் பின்னிப் பிணைந்ததாக எதிர்காலத்தில் ஜனாதிபதி மேற்கொள்ளவிருக்கும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு முயற்சி காணப்படுகிறது.

பிரதான கட்சிகளால் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்ட தீர்வுப் பொதியானது கடந்த பாராளுமன்றத்தில் காணப்பட்ட பிளவுபட்ட அரசியலில் விளையாட்டுப் பொருளாக மாறியிருந்தது.

ஆயினும் தற்போதைய பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கும் எதிரணிக்குமிடையே ஒரு சமநிலை காணப்படுகிறது. அத்துடன் அரசியல் நோக்கம் தொடர்பான பரீட்சைக்கு இணக்கம் காணக்கூடிய நிலைமையைப் புதிய பாராளுமன்றம் உருவாக்க முடியும் என்று அரசாங்கமும் எதிரணியும் நிரூபிக்கும் விதத்தில் பாராளுமன்றம் அமைந்து இருக்கிறது, எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீளக்குடியமர்வை ஊக்குவிக்க நோர்வே அரசாங்கம் நிதியுதவி

வடக்கில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் அவர்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் நோர்வே அரசாங்கம் நிதி உதவி அளித்துள்ளது நோர்வே அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள நிதி உதவியில் 580 லட்சம் ரூபா செலவில் ஒரு தொகுதி புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வடக்கிற்கான புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், வடக்கில் தற்போது தொடரும் யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவ, அகதிகளுக்கான ஐக்கிய நாட்டு உயர் ஸ்தானிகராலயமும் (யூ.என்.எச்.சி.ஆர்) முன்வந்துள்ளது. இந்நிறுவனம், வடக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நலன் புரி ஏற்பாடுகளுக்கும் வருமானம் தரவல்ல தொழில்களை தொடங்குவதற்குமாக 93 லட்சம் ரூபாவை அளித்துள்ளது.

வடக்கிற்கான புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் நிதியில் இருந்து பொது மற்றும் அரச ஊழியர்களது சொத்துகளுக்கு கடந்த யுத்த காலங்களின் போது ஏற்பட்ட சேதத்திற்கு நஷ்டஈடாக ரூபா 756 லட்சமும், யுத்தத்தினால் பாதிப்படைந்து மரணம் மற்றும் காயம் அடைந்தவர்களுக்கான நஷ்டஈடாக ரூபா 100 லட்சமும் வவுனியா அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ளது.

வணக்கஸ்தலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை திருத்தியமைக்க உதவியாக 19 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது

## நன்கு சேவையாற்றுபவரே அம்பாறையில் தெரிவாகியுள்ளார்.

நன்றாக சேவை செய்யக் கூடிய ஒருவரே அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் இம் முறை தேர்ந்தெடுத துள்ளனர். இது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ் மகாசங்கத் தலைவர் எஸ். சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். மகா சங்கத்தைச் சேர்ந்த வேட்பாளர் த.மகேஸ்வரன் மற்றும் பிரமுகர் எஸ். நல்லதம்பி ஆகியோர் முன்னிலையில் விடுக்கப்பட்ட அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இளைய தலைமுறையினரின் வாரிசாக கௌரவ சங்கர் திகழ்கிறார். அவர் எமது பிரதேசத்திற்கும் நாட்டிற்க்கும் சேவையாற்ற வாழ்த்துகின்றோம். இடைநடுவில் மகாசங்கம் என்ற போர்வையில் தலைமைத்துவத்திற்குத் தெரியாமல் ஒரு சில துண்டுப் பிரசுரங்கள் வெளியானமை வேதனைக்குரியது.

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் இம் மாவட்டத்தில் தமிழர் பிரதிநித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக பல வருட காலமாக கவனம் செலுத்தி வந்தது. அந்த அதீத கவனம் இம் முறை தக்க பலனைத் தந்துள்ளது. இதற்காக அனைவருக்கும் நன்றிகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கவனத்தைக் கவராத படுகொலைகள்

தேர்தல் நடந்து முடிந்த கையோடு யாழ்ப்பாணம் ஒரு செய்திக் களமாகவே மாறிவிட்டது. தேர்தல் பெறுபேறுகளை அடுத்து இங்கு நிகழ்ந்து முடிந்த மனிதப் படுகொலைகளே இன்றுவரையும் யாழ்ப்பாணம் பற்றிப் பேச வைத்துள்ளது. எவராலும் நியாயப்படுத்த முடியாத பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலையை அடுத்து இணுவிலிலும் நெல்லியடியிலும் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த 24ம் திகதி இணுவிலில் அவரது வீட்டிலிருந்த 5 பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணபிள்ளை அருந்தவச்செல்வம் (வயது 33) இரு துப்பாக்கி இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். துப்பாக்கி நபர்கள் அருந்தவச்செல்வத்திடமிருந்து அவரது மோட்டார் சையிக்கிளை கேட்டிருந்தார்கள். அதனை கொடுக்க மறுத்தபோது எழுந்த தர்க்கத்தை அடுத்து துப்பாக்கிதாரிகள் அருந்தவச் செல்வத்தை சுட்டுக்கொன்று விட்டு தப்பிஓடிவிட்டனர். இச்சம்பவத்தின் போது அருந்தவச் செல்வத்தின் சகோதரி அமிர்தலிங்கம் சுதர்சினியும் (வயது 19) காயமடைந்துள்ளார்.

இவ்வாறே கடந்த 25ம் திகதி நெல்லியடி சந்தைக் குத்தகைக்காரர் கந்தப்பு தவராசா (பாவா, வயது 33) அயல் வீட்டாருடனான தகராறு காரணமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அடுத்தடுத்து இடம் பெற்றுள்ள இக்கொலைகளில் அரசியல் பின்னணி எதுவும் இல்லை என்று எவரும் கூறிவிட முடியாது. அருந்தவச்செல்வத்தினுடைய கொலையின் சூத்திரதாரிகள் யார் என உறுதிபடக் கூறிவிட முடியாயினும் தவராசாவின் படுகொலையில் புலிகளின் பங்கு தெளிவாகியுள்ளது. இக்கொலையின் பங்காளிகளில் ஒருவரான அயல்வீட்டுக்காரரும் புலிகளின் முன்னாள் உறுப்பினருமான சுதாகர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் தவராசாவை சுட்டுக் கொன்றவர் என இறந்தவரின் மனைவியினால் அடையாளம் காட்டப்பட்ட முன்னாள் புலி உறுப்பினரும் கடந்த பொதுத் தேர்தலில் மீன் சின்னத்தில் உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டவருமான சுந்தரமூர்த்தி தலைமறைவாகிவிட்டார்.

எந்தவொரு மனிதனது கொலையை அனுமதிக்கவும் முடியாது. நியாயம் கற்பிக்கவும் முடியாது. இத்தளத்தில் நின்று, இனிவருங்காலத்திலும் இத்தகைய படுகொலைகள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ் ஊடகவியலாளர்கள் உட்பட தமிழ்ச் சமூகத்தின் சகல தரப்பினருக்கும் உரிய கடமையாகும்.

## நாட்டில் ஐக்கியம் மலர ஆசைப்பட்டவர் சிறிமாவோ

இந் நாட்டில் சாந்தியையும் சமாதானத்தையும் நிலைநாட்டி தேசிய சிறுபான்மை இன மக்களுக்குச் சிறந்த ஒளிமயமான வாழ்வை வழங்க வேண்டுமென பெரிதும் அவாவுற்று இருந்தவர் அமரர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள். இவ்வாறு திருமதி சிறிமாவோவின் இறுதிக் கிரியைகளின் போது இரங்கலுரை நிகழ்த்திய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் கடும் சுகவீனமாக இருந்த போதும் பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு சமர்ப்பிக்கப் பட்டபோது முச் சக்கர வண்டியில் அங்கு வருகை தந்திருந்தார்.



புதிய அரசியலமைப்பு நிறைவேறி அமுலுக்கு வரவேண்டுமெனப் பெரிதும் விரும்பியிருந்தார். மக்கள் அனைவரும் ஐக்கியமாக வாழ வேண்டும் என்பதே அவரது ஒரே குறிக்கோளாக இருந்தது.

மறைந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் யூகோஸ்லாவாக்கிய அதிபர் மார்ஷல் டிட்டொ, சீன அதிபர் சூ.என். லாய், இந்திய பிரதமர் இந்திரா காந்தி போன்ற தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தார் எனவும் குறிப்பிட்டார்.

# மனித நேயம்; தேசப்பற்று; கடமை உணர்வு இவற்றின் மொத்த வடிவம் தோழர் ரமேஸ்!

**பாராளுமன்ற உறுப்பினரும், தினமுரசு வார இதழின் ஆசிரியருமான அற்புதராசா நடராசா ( தோழர் ரமேஸ்) அவர்களின் மறைவு குறித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அனுதாபப் பிரேரணையின் மீது எஸ். தவராசா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளது. அவரது முதலாவது நினைவு தினத்தை குறிக்கும் வகையில் இது வெளியிடப்பட்டுள்ளது.**

இலங்கையை உலுப்பிய 1983 இன் ஆடிக்கலவரம் உருவாக்கிய பல்லாயிரக் கணக்கான போராளிகளில் ஒருவர் அற்புதராஜா நடராசா, தொண்டனாக - ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழராக அறிமுகம் ஆனார். பதினைந்து வயதில் ஆயுத மேந்திய எதிர்ப்பியக்கம் ஒன்றுக்காக தன்னை அர்ப்பணித்திருந்தார். எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வை மனதிலிருத்தி தனது வாழ்க்கையை பணயம் வைத்தார். எனினும் உணர்ச்சிகளால் மட்டும் உந்தப் பட்டுச் சென்றவர்களில் ஒருவராக அவர் இருக்கவில்லை. ஆயுதங்களின் மேல் கொண்ட மோகத்தால் ஈர்க்கப்பட்டவராக அவர் காணப்படவில்லை. மனித நேயம், தேசப்பற்று, கடமையுணர்வு என்று அத்தனை உணர்வுகளையும் தன்னுள் கொண்டிருந்தார், தோழர் ரமேஸ்.

உண்மையான ஒரு போராளியாய் உருவெடுத்த நிலையில் தலைமையின் எண்ணங்களுக்கும் மக்களின் நலன்களுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதை இனம் கண்ட போது சினம் கொண்டார் எம் தோழர் ரமேஸ். போர்த்தி வைக்கத் தெரியாத அந்தச் சினத்தை அவர் வெளிக் காட்டிய போது அது உட்கட்சிப் பூசலாக உருமாற்றம் பெற்றது. சமரசம் செய்து கொள்ளாத சத்தியங்களின் உறுதியுடன் அவர் நிமிர்ந்த போது ஒரு குருஷேத்திரம் தோற்றம் கொண்டது. உடன்பிறப்புகளாக தோள்கொடுத்த தோழர்கள் குற்றம் சுமத்தி விசாரணைகளை மேற்கொள்ளவும் யாழ்ப்பாணத் தெருக்களில் ஒரு நெருப்பு மூண்டது.

1983இன் ஆடிக்கலவரத்தையடுத்து கல்வியைத்துறந்து எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய எண்ணம் எதுவுமில்லாமல் மக்கள் சேவைக்காக தன்னை ஐக்கியப் படுத்திய தோழர் ரமேஷ் 1986இன் இறுதிப் பகுதியில் தான் சார்ந்திருந்த விடுதலை அமைப்பின் செயற்பாடுகள் குறித்து விரக்திக்கும் வெறுப்புக்கும் உள்ளானார்.

1986இன் இறுதிப்பகுதியில் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை தாங்களே மொத்தமாக குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் அவசரத்துடிப்பை வெளிப்படுத்திய புலிகளின் மரண வலைக்குள் சிக்கிக் கொள்ளாது இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். தோழர் ரமேஷ் அங்கிருந்தும் எங்கும் தப்பியோட முயலாமல் மக்களுக்கான தனது பணியைத் தொடர்ந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம், இந்தியப்படை புலிகள் மோதல், வடக்கு கிழக்கு மாகாணசபை அமைப்பு, 1989 பொதுத்தேர்தல், பிரேமதாஸா பதவியேற்பு, இந்தியப்படை வெளியேற்றம், மீண்டும் புலிகள் இலங்கை இராணுவம் மோதல் என்றவாறான தமிழ் பேசும் மக்களின் அரசியலில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள் ஒவ்வொன்றின்போதும் எதுவும் செய்ய முடியாத நிலைமைக்குள் தள்ளப்பட்டிருந்த சாதாரண மக்களில் ஒருவராகவே தோழர் ரமேஷ் காலம் கடத்த வேண்டியதாய் போய்விட்டது.

இந்தியப் படையின் வெளியேற்றத்தை யடுத்து புலிகளும் பிரேமதாஸா அரசும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தனர். இந்தச் சூழ்நிலையிலேயே தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு குரல் கொடுக்கவும் இலங்கைத் தீவின் ஐக்கியத்தைப் பேணியபடி இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வைத் தேடவும் வேண்டிய வரலாற்றுத் தேவை ஒன்று ஏற்பட்டது. இந்த வரலாற்றுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றுத் தலைமையொன்று கட்டியெழுப்பப்பட வேண்டிய அவசியம் உணரப்பட்டது. இதன் வெளிப்பாடாகவே திரு டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உருவாக்கப்பட்டது. இக் கருவை, காவி வளர்த்து இன்று ஈழமாநிலம்எங்கும் கிளைபரப்பி விழுதெறிந்து தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமையாக ஈழமக்கள் ஜனநாயக கட்சி வளர்ச்சியடைந்துள்ள நிலைமைக்கு காத்திரமான பங்கினை அளித்தவர் தோழர் ரமேஷ் அவர்கள்.

அள்ளப்படும் ஆயுதங்களின் தொகை, கொன்று குவிக்கப்படும் எதிராளிகளின் எண்ணிக்கை, மீட்கப்படும் நிலத்தின் பரப்பு என்பவற்றின் அடிப்படையில் ஒரு இராணுவ வெற்றி அல்லது பின்னடைவு இலகுவாகத் தீர்மானிக்கப்பட்டு விடலாம். ஆனால் மக்களின் அங்கீகாரத்துக்கான அரசியல் வெற்றிகளை நிலை நாட்டுவதென்பது

## குருதி வடியும் காயங்கள்

அவ்வளவு இலகுவானதல்ல. 90 களிலிருந்து நான்காண்டுச் செயற்பாடுகளின் பின்னர் ஒன்பது உறுப்பினர்களுடன் எம்மவர்கள் பாராளுமன்றத்துக்குள் புகுந்தபோது கேலி பேசியவர்கள் பலர் கிண்டல் செய்தவர்கள் பலர். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலைப் புலிகள் வழங்காத வழங்கவிரும்பாத ஜனநாயக அரசியல் உரிமைகளின் பிரதிநிதிகளாகவே நாங்கள் தொழிற்படுகின்றோம். குடாநாட்டில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலின் மூலமாகவும் பிற வழிகளாலும் மக்களின் மனப்பூர்வ ஒப்புதலும் அங்கீகாரமும் எமது கட்சிக்கு கிட்டியுள்ளது. எமது கட்சியின் இவ்வளர்ச்சிப் படிகளில் தோழர் ரமேஸின் பங்களிப்பு அளப்பரியது.

பிறப்பு 16 ❖ 09 ❖ 1963



அழிப்பு 02 ❖ 11 ❖ 1999

அற்புதராசா நடராசா (ரமேஸ்)

தமிழ் பேசும் மக்கள் மீது பேரினவாதப் போக்குகளின் அடிப்படையிலான அடக்கு முறைகளை எதிர்த்த அதே சமயம் மண்ணை மீட்பதாகக் கூறிக் கொள்பவர்களின் ஜனநாயக மறுப்புப் போக்குகளுக்கு எதிரானவராகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார் தோழர் ரமேஷ் அவர்கள்.

அவரது எண்ணங்களும் எழுத்துக்களும் பலரைச் சினம் கொள்ள வைத்திருக்கிறது. பலரைச் சீண்டச் செய்திருக்கின்றது. ஆனாலும் வார்த்தைகளை அவர் பயன்படுத்திய விதம் அவர்களை மௌனத்திற்கே தள்ளி விட்டிருந்தது. விடாமுயற்சி, கடின உழைப்பு என்பன அவரது ஆற்றலைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்திருந்தது. அதனாலேயே அனுபவமும் ஆற்றலும் மிக்க பழம் பெரும் பத்திரிகைகளைப் புறத்தே ஒதுக்கி தினமுரசு பத்திரிகையை அவரால் முன்னணிக்கு கொண்டுவர முடிந்தது.

ஆயுதமேந்திய எதிர்ப்பியக்கம் நடத்துவதால் மட்டும் தமிழ் பேசும் மக்களை அரசியல் ரீதியாக முற்று முழுதாக விடுதலை நோக்கி வழிநடத்த முடியாது என்பதை உணர்ந்து, தமிழ் பேசும் மக்களின் ஜனநாயகப் பாதை வழியே பயணித்துக் கொண்டிருந்த எங்கள் தோழர் ரமேஷ் வெள்ளவத்தை ஸ்ரேசன் வீதியில் வைத்து மக்கள் விரோத சக்திகளின் துப்பாக்கியினால் கொலை செய்யப்பட்டார். தமிழ்பேசும் மக்களின் அரசியல் விடுதலைப் பயணத்தில் தன்னுயிர் ஈந்த தோழர் ரமேஷ் அவர்களின் இலட்சியங்களைத் தாங்கி தொடர்ந்து முன்னேறுவமாக!.

---

முன்பக்கத் தொடர்ச்சி

## மக்களுக்கு நிறைவான சேவையாற்ற...

அரசாங்கத்தால் ஒருவர் நியமிக்கப்படுவதைத் தவிர, தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லையாதலால் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால சபையை நிறுவுவதற்கான பிரேரணை நடைமுறைக்கு வரமாட்டாது. அத்துடன் அவர்கள் வெளிப்படையாக புலிகளின் பயமுறுத்தலை முகம் கொள்ள வேண்டியிருக்கும். கொழும்பில் இருந்து ஒரு இடைக்கால சபை தொழிற்படுவது மக்களுக்கு திருப்தியைத் தரமாட்டாது.

இந்தக் கணத்தில் தமிழர்களின் இதயத்தில் இருந்து எழுகின்ற ஒரேஒரு கேள்வி, யார் இந்த யுத்தத்தை நிறுத்துவார்கள்? யார் மூன்றாம் தரப்பு உதவியுடன் பேச்சு வார்த்தையை தொடக்குவார்கள்? சமாதானத்துக்கான யுத்தம் எனும் உருக்குலைந்த கொள்கையுடன் அரசாங்கம் தொடரப்போகின்றதா அல்லது அரசாங்கத்தினால் அரசியல்யாப்பினை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளில் தனது அடுத்த ஐந்தாண்டுகளைக் கழிப்பதில் தனது சக்தியை செலவழிக்கப் போகின்றதா அல்லது மூன்றாம் தரப்பு உதவியுடன் அமைதிப் பேச்சு வார்த்தையை தொடக்குவதற்கான உடனடிக் கேள்விக்கு முகம் கொடுப்பார்களா?

எனது எண்ணங்களை உங்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன். தேர்தலுக்கு சற்று முன்னதாக "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" நிருபர் ஒருவர் என்னிடம் பேட்டி கண்ட போது சந்திரிக்காவினுடைய கட்சியையா அல்லது ரணிலுடைய கட்சியையா தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள் எனக் கேட்டிருந்தார். பெரும்பான்மைச் சமூகத்தவரால் தமிழ்ச் சமூகத்திற்கு இழைக்கப்பட்டு வந்த அநீதியை ஜனாதிபதி சந்திரிக்கா ஒருவரே துணிச்சலுடனும் விடாப்பிடியுடனும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதுடன் தற்போதய பிரச்சினைக்கு இதுவே மூலகாரணம் எனவும் இது சரி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் பதில் அளித்திருந்தேன்.

கட்சியின் நலன்களுக்கு முக்கித்துவம் அளிப்பதுடன் முன்னேற்றம் தரவல்ல ஒன்றாக நாட்டினதும் மக்களினதும் பாரிய நன்மைக்காக கட்சியும் தியாகம் செய்ய வேண்டும். மக்களுக்கு நிறைவான சேவை செய்வதற்காக மீண்டும் ஒருமுறை எனது நல்லாசிகளையும் வாழ்த்துகளையும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். சர்வ வல்லமையுள்ள ஆண்டவரின் ஆசி உங்களுக்கு கிடைப்பதுடன் உங்களுக்கு பாதுகாப்பையும் அளிக்கட்டும்.

---

முன்பக்கத் தொடர்ச்சி

## காளாஞ்சி வழங்கி பொன்னாடை .......

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதல்களை உடன் நிறுத்துவதற்கும் கொழும்பிலுள்ள தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து என்பன போன்ற விடயங்களைக் கையாள ஈ.பி.டி.பியினர் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

போர் என்பது எப்போதும் ஒரு கை ஓசையல்ல மறுதரப்பும் இதில் பங்களிப்பு செய்ய முன்வரவேண்டும் என்று செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த குருமார் தற்போது நடைபெறும் மோதல்களைப் போர் என்று குறிப்பிட முடியாது. ஏனெனில் இரு நாட்டு இராணுவங்களுக்கிடையிலான பலப்பரீட்சையே போர் எனப்படுகிறது. ஆனால் இங்கு ஒரு நாட்டுக்குள்ளேயே மோதல் நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியதுடன் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கு மோதல் நிறுத்தப்பட வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டனர்.

பல குரல்கள் இவ்வாறு ஒலிக்க முன்வரவேண்டும் எனக்கேட்டுக் கொண்ட செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு தமது ஆசிர்வாதங்களும் பூரண ஒத்துழைப்பும் எப்போதும் கிட்டும் எனக் குருமார் தெரிவித்தனர். அத்துடன் இந்துசமய முறைப்படி காளாஞ்சி வழங்கி ஆசிர்வாதங்கள் தெரிவித்ததுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர்.

மக்கள் குரல்

ஒலி : 1 குரல் : 6 ஐப்பசி 2000 அன்பளிப்பு : 5.00 ரூபா

# அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத்தர கூட்டணியினர் முன்வந்துள்ளனர்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்க முன் வந்திருப்பதாக அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கூறியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உயர் மட்டதூதுக்குழு பாராளுமன்ற விவகார, சமுர்த்தி அமைச்சர் எஸ். பி. திசாநாயகா அவர்களைக் கடந்த 23ம் திகதியன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இந்த பேச்சுவார்த் தையின் போதே கூட்டணியின் இந் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் அவசர காலநிலை நீடிப்பு மற்றும் வரவு செலவுத்திட்டம் என்பன தொடர்பாக கூட்டணி அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்குமாம்.

போரை முடிவுக்கு கொண்டு வந்து தமிழ் மக்களின் அமைதியான வாழ்வுக்கு ஆவன செய்ய வேண்டும் எனவும், சமாதான முயற்சியில் அரசாங்கம் புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் எனவும் கூட்டணியினர் வலியுறுத்தி இருக்கின்றனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தங்குமிடம், வாகனம், பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் த.வி கூட்டணியினர் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

# கட்சிக்கு தந்த காத்திரமான ஆதரவுக்கு ஈ.பி.டி.பி. நன்றி தெரிவிக்கிறது

நடந்து முடிந்த பதினோராவது பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஈ.பி.டி.பி கட்சிக்குத் தந்த காத்திரமான ஆதரவுக்கு நாம் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் யாழ் மாவட்டத்தில் நான்கு ஆசனங்கள் பெற்று அதன் அரசியல் தலைமையைக் கைப்பற்றியுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தில் ஒரு ஆசனத்தையும் ஈட்டி ஆபத்துக்குள் ளாகியிருந்த தமிழ் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை ஈட்டி கொடுத்துமுள்ளோம்.

மக்கள் தமது தீர்ப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு ஓர் ஆளுமையுள்ள தலைமைத்துவத்தை நிலைநிறுத்த வேண்டிய காலத்தின் தேவையை நிறைவேற்றியுள்ளார்கள். அதனால் இன்று இந் நாட்டின் அரசாட்சியைத் தீர்மானிக்கும் தீர்க்கமான அரசியல் சக்தியாக ஈ.பி.டி.பி. தமிழ் பேசும் மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதனால் எமது கட்சியைக் கூட்டரசாங்கம் அமைக்க நாடவேண்டிய தேவை ஆளும் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. எமக்கு அதிகூடிய அதிகாரங்களுடனான அமைச்சொன்றையும் சில பிரதி அமைச்சர் பொறுப்புக்களையும் வழங்குவதற்கு ஆளும் கட்சி முன்வந்துள்ளது. இதை எமது மக்களுக்கு கிடைத்த கௌரவமாகவே நாம் கருதுகிறோம். இது எமது இனிய மக்களின் விவேகமிக்க பேராதரவால்தான் சாத்திய மாகியுள்ளது.

அத்தகைய வரலாற்றுச் சந்தர்ப்பத்தையும் எமக்கு கிடைத்துள்ள மக்கள் பலத்தையும் நாம் பொறுப்புணர்வோடும் விவேகத்தோடும் வினைத் திறனோடும் பாவித்து தமிழ் பேசும் மக்களுக்கு அர்த்தபூர்வமான அரசியல் தீர்வொன்றைக் காணவே நாம் முதன்மையாக உழைப்போம்.

அதேவேளை பல தசாப்த காலங்களாக அபிவிருத்தியேதுமின்றி முடங்கிப்போயிருக்கும் இத் தமிழ்ப் பிரதேசங்களை மேம்படுத்தவும் அங்குள்ள தமிழ்ப் பேசும் மக்களின் ஒவ்வொருவரது நலனிலும் அக்கறையெடுத்து அவர்களின் குறைகளை நிவர்த்திக்கவும் அன்றாடத் தேவைகளை நிறைவுசெய்யவும் நாம் உடனடிக் கவனம் செலுத்துவோம்.

அத்துடன் நில்லாது எம் மக்களுக்கான பாதுகாவலனாக நின்று அவர்களின் இன்னல்களுக்கு முகம் கொடுத்து உரிய நடவடிக்கைகளில் இறங்குவோம். எம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவான மாவட்டங்களில் மட்டுமன்றி சகல தமிழ்பேசும் பிரதேசங்களது தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் எமது சேவை பாரபட்சமின்றியும் நேர்மையாகவும் மிக வினைத்திறனுடனும் இருக்குமென்று நாம் உறுதியளிக்கிறோம்.

உங்கள் ஆதரவுடன் மென்மேலும் பலம்பெற்று எமது அரசியல் இலக்குகளை வெற்றிகொள்வோம் என்ற நம்பிக்கையுடன் இன்று எமது கரங்களைப் பலப்படுத்தியுள்ள தமிழ்பேசும் மக்களுக்கு எமது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் என்றும் எமது மக்களோடிருப்போம்.

கே. என். டக்ளஸ் தேவானந்தா
செயலாளர் நாயகம்

# பிந்துனுவெவ முகாம் மீதான தாக்குதல் வன்மையான கண்டனத்திற்குரியது

பண்டாரவளை பிந்துனுவெவவில் இயங்கி வந்த புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட கோரத்தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கான அனுதாபங்களை வெளிப்படுத்துவதுடன் காயப்பட்டவர்களுக்காக எமது ஆறுதல்களையும் தெரியப்படுத்துகின்றோம்.

இவ்வாறு பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்படுகையில்

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் புலிகள் இயக்கத்திலிருந்து சரணடைந்த மற்றும் கைதான சந்தேக நபர்களில் வயதில் குறைந்தவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. தமிழ் பேசும் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு ஜனநாயக வழியில் தீர்வுகாண முனைப்புகள் சகல வழிகளிலும் மேற்கொள்ளப்படும் இத் தருணத்தில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளமை துரதிஸ்டவசமானதாகும். அமைதியையும் சமாதானத்தைம் நிலைநாட்டி தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் விமோசனம் கிடைக்க வழிசெய்யும் சக்திகளுக்கு தேசிய அரசியலில் கிட்டி வருகின்ற அந்தஸ்துகளைச் சகித்துக் கொள்ள முடியாத பேரினவாதிகளின் வெறித்தனமான தூண்டுதல்கள் இச் சம்பவத்தின் பின்னணியில் இருந்திருக்கிறது.

1983 யூலைக் கலவரத்தின் போது கைதிகளாக இருந்த தமிழ் போராளிகள் வெலிக்கடை சிறைக்குள் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் இருந்தனர். இதன் பின்விளைவுகளை நாடு இன்றுவரை எதிர்நோக்கி வருவதை எல்லோரும் அறிவர். இந்த வெலிக்கடைத் தாக்குதலில் சிக்கிய போதும் உயிர்தப்பியவர்களில் ஒருவர் என்ற வகையில் சிறைச்சாலை தாக்குதலின் கொடூரத்தை அனுபவ பூர்வமாகவே நான் உணர்ந்துள்ளேன்.

எனினும் கடந்த காலங்களைப் போலன்றி தாக்குதல் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதும் இத்தகைய வன்முறை அலை பரவுவது கட்டுப்படுத்தப் பட்டிருப்பதும் கவனத்திற்கு உரியன.

இந்தத் தாக்குதலில் பாதிப்படைந்த அனைவருக்கும் நியாயமான உரிய இழப்பீடுகள் வழங்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும். அத்துடன் நாட்டின் எப்பாகத்திலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவற்றின் மூலமாக தமிழ் பேசும் மக்களின் மத்தியில் சமாதான சகவாழ்வுக்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

# தேர்தல் பெறுபேறை கண்டித்து மட்டக்களப்பில் கடையடைப்பு

மக்கள் புறக்கணித்த மக்களால் விரும்பப்படாத மக்களின் எதிரியான ஜோசப் பரராஜசிங்கம் மக்களின் பிரதிநிதியாக வேடமிட்டுள்ளார். வாக்கெடுப்பு நிலையத்தில் கள்ள வாக்குகள் இடப்பட்டதும், வாக்கு கணிப்பு நிலையத்தில் லஞ்ச ஊழல் மற்றும் வாக்கு சுவீகரிப்பு என்பன இடம் பெற்றதும் பலரும் அறிந்த விடயமே.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளியான துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிமைத் தமிழர்கள் உரிமைக் குரல் எதிரொலி மட்டக்களப்பு என்ற அடையாளத்துடன் வெளியான இப் பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்படுகையில்,

செயல்திறனும் நேர்மையும் உடையவர்களும் மக்களால் நேசிக்கப்பட்டவர்களுமான பிரதிநிதிகளோ, கட்சிகளோ, இந்த முறை தெரிவு செய்யப்படவில்லை. சதி நடவடிக்கை கள் மூலம் தோற்கடிக்கப் பட்டுள்ளனர். வாக்கு கேட்டு மக்கள் மத்தியில் சென்ற போதெல்லாம் செருப்பெறியும், கல்லெறியும் பட்ட ஜோசப் எவ்வாறு பாராளுமன்ற உறுப்பின ராகத் தெரிவு செய்யப்படடுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது

அத்துடன் ஜோசப் பரராஜசிங்கத்தின் தெரிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கடந்த 17.10.2000 அன்று கடையடைப்பும் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கு இலைக்கஞ்சி

வவுனியா வடக்கு வலயக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டமொன்றை ஈ.பி.டி.பி அறிமுகம் செய்துள்ளது.

மதிய உணவாக இலைக்கஞ்சி வழங்கப்படவுள்ள இத் திட்டத்தினால் வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மற்றும் கட்டுப்பாட்டிலில்லாத 84 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் எட்டாயிரம் மாணவர்கள் வரை பயன் பெறவுள்ளனர்.

முன்பக்கத் தொடர்ச்சி

# செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா

அபிவிருத்தி, போரினால் பாதிக்கப்பட்ட குடிமக்களின் புனர்வாழ்வளிப்பும் மீள் குடியமர்த்துகையும், ஆட்களினதும் ஆதனங்களினதும் புனர்வாழ்வளிப்பு, போரினால் பாதிக்கப்பட்ட வணக்கத்தலங்களின் புனரமைப்பு, இடம்பெயர்ந்த ஆட்களின் குடிமனைகளின் சீராக்கல் புனரமைப்பு புனர்வாழ்வளிப்பு, வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் விவகாரங்களோடு தொடர்பு கொண்ட விடயங்கள், இந்து சமய பண்பாட்டு விவகாரங்கள் போன்ற பணிகளையும் அமைச்சு முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்க வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது.

சமாதானம் ~ ஜனநாயகம் ~ சமூக முன்னேற்றம்

இப்பிரசுாம் 121. புங்கா வீகி. கொமும்ப 05 ஐச் சேர்ங்க அ. இராசமாணிக்கம் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது